வானவில்

VAANAVIL

இதழ் – 75
பங்குனி 2017

ISSUE – 75
MARCH 2017

# மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு சரியான தலைமையும் வழிகாட்டலும் அவசியம்

இலங்கையில் இப்பொழுது எங்கு திரும்பினாலும் ஒரே போராட்டமயமாக இருக்கின்றது. முன்னொருபோதும் இல்லாத அளவுக்கு மக்கள் நாளாந்தம் போராட்டக்களங்களை நோக்கி அணி வகுத்துச் செல்வதைக் காண முடிகிறது.

இலங்கையில் மாத்திரமின்றி, உலகம் முழுவதும் 1960களின் பிற்பகுதியில் ஏற்பட்டது போன்ற மக்கள் எழுச்சி ஒன்றுக்குத் தயாராகி வருவதாகத் தெரிகிறது.

கடந்த சில மாதங்களில் நமது அண்டை நாடான இந்தியாவின் தமிழக மாநிலத்தில் ஜல்லிக்கட்டு உரிமைக்கான போராட்டம் (ஜல்லிக்கட்டு பற்றிய எமது கருத்து வேறாக இருந்தபோதும்), நெடுவாசல் இயற்கை எரிவாயுத் திட்டத்துக்கு எதிரான போராட்டம் என இரண்டு மிகப் பிரமாண்டமான மக்கள் தன்னெழுச்சிப் போராட்டங்கள் நடைபெற்று ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளன.

இப்படியான ஒரு தன்னெழுச்சிப் போராட்டம் கடந்த ஆண்டு எமது நாட்டின் மலையகத் தோட்டத் தொழிலாளர்களால் நடாத்தப்பட்டு, அது ஒரு சிறிய அளவு வெற்றியும் ஈட்டியது. இவ்வாறான பல போராட்டங்கள் தற்பொழுது இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு தரப்பட்ட மக்களால் நடாத்தப்பட்டு வருகின்றன.




இந்தப் போராட்டங்களில் சில குறிப்பிட்ட அமைப்புகளால் திட்டமிட்ட முறையில் நடாத்தப்படுவன. சில போராட்டங்கள் ~ சில மறைமுக வழிநடத்தல்கள் இருந்தபோதும் - தன்னெழுச்சியாக ஆரம்பமானவை.

குறிப்பாக நீண்டகாலமாக காலத்துக்காலம் நடைபெறும் தமிழ் கைதிகளின் போராட்டம், இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களில் தமது காணிகளை மீட்கும் போராட்டம், காணாமல் போனோரைக் கண்டறியும் போராட்டம், கிளிநொச்சி பன்னங்கட்டிப் பகுதியில் குடியிருக்கும் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களின் நில உரிமைக்கான போராட்டம் என்பன தன்னெழுச்சியாக உருவாகி நடைபெறும் போராட்டங்கள்.

அதே நேரத்தில் தலைநகர் கொழும்பை மையமாகக் கொண்டு நடைபெற்ற துறைமுக ஊழியர்களின் போராட்டம், புகையிரத ஊழியர்களின் போராட்டம், சுங்க ஊழியர்களின் போராட்டம், தாதியர்களின் போராட்டம், வைத்தியர்களின் போராட்டம்

போன்றவையும், தற்போது ‘சைட்டம்’ என்ற தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான மாணவர்கள், வைத்தியர்கள், வைத்திய அதிகாரிகள் ஆகியோர் நடாத்தும் போராட்டமும் திட்டமிட்ட முறையில் அமைப்புகளால் முன்னெடுக்கப்படும் போராட்டமாகும்.

இவற்றில் எமது கவனத்தைப் பெறுபவை தன்னெழுச்சியாக நடைபெறும் போராட்டங்களாகும். அதற்குக் காரணம் இந்த மக்கள் ஏன் தன்னெழுச்சியாகப் போராடப் புறப்பட்டார்கள் என்பதாகும். ஏனெனில் இலங்கையில் எல்லாவிதமான மக்களும் ஏதோ ஒருவகையில் ஏதாவது ஒரு அரசியல் தலைமையின் கீழேயே

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

நூறு சிந்தனை மலரட்டும்

# காலந்தாழ்த்திய கரிசனைக்கு காலவகாசம் கோரும் அரசு!

**ஐ**க்கிய நாடுகள் சபை மனித உரிமை பேரவையின் இலங்கை தொடர்பான போர்க்குற்ற விசாரணை விவகாரம் மீண்டும் ஒருமுறை இலங்கை அரசியலில் விவாதப் பொருளாக வலம் வருகின்றது. கடந்த 6 வருடங்களாக இது ஒரு 'மழை ஓய்ந்தும் தூவானம் நிற்காத' கதையாகத் தொடர்கின்றது. தற்போது ஜெனிவாவில் ஐ. நா. சபை மனித உரிமை பேரவையின் கூட்டம் நடந்து வருகின்றது. இதில் இலங்கை, ''இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்பு கூறல், மனித உரிமைகள் மேம்படுத்துதல்'' என்ற தலைப்பில் ஒரு தீர்மானம் தாக்கல் செய்து, போர்க்குற்ற விசாரணைக்கு மேலும் 2 ஆண்டுகள் அவகாசம் கேட்கின்றது. இந்தத் தீர்மானம் தொடர்பாக விரைவில் வாக்கெடுப்பு நடக்கவுள்ளது. இதுவரையில் அமெரிக்கா, பிரித்தானியா உட்பட 4 நாடுகள் இத்தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் இத்தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிக்கக்கூடாதென இந்திய மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள்.

2015ம் ஆண்டு செப்டம்பரில் ஐ. நா. மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமானது, சர்வதேச மற்றும் இலங்கை நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற (hybrid court) விசாரணைப் பொறிமுறையை உருவாக்கி போர்க்குற்ற விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்பதாகும். இலங்கை அரசின் அனுசரணையுடன் எந்த உறுப்பு நாடுகளினதும் எதிர்ப்பின்றி இத்தீர்மானம் ஏகமனதாக அப்போது நிறைவேற்றப்பட்டது. ஆனால் தற்போது இலங்கை ஜனாதிபதியும் பிரதமரும் போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிபதிகளுக்கு இடமில்லையெனக் கூறியிருக்கின்றனர். இலங்கை வெளிநாட்டமைச்சரோ இவர்கள் இருவரின் கருத்துக்கு முரணனான வகையில் போர்க்குற்ற விசாரணையில் ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானத்திற்கு ஆதரவாக கருத்துக்களை தெரிவித்து வருகிறார். அதேவேளை பிரதமரால் நியமிக்கப்பட்ட மனோரி சரத்முத்தட்டுகமவின் தலைமையிலான நல்லிணக்கப் பொறிமுறைக்கான கலந்தாய்வுச் செயலணி, போர்க்குற்ற விசாரணையில் ஆகக்குறைந்தது ஒரு வெளிநாட்டு நீதிபதியாவது இருக்கவேண்டுமென அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. இதற்கு தேசிய ஒற்றுமை மற்றும் நல்லெண்ணத்துக்கான பணியகத்தின் தலைவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவோ போர்க்குற்ற விசாரணையே தேவையில்லையெனக் கூறியிருக்கிறார்.

இதற்கிடையே, இலங்கைக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கக்கூடாது என தெரிவித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 பேரில் 11 பேர் கையெழுத்திட்டு ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடிதமொன்று அனுப்பி வைத்துள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் சுமந்திரன் இந்தக் கடிதம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், கையொப்பமிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ள 11 பேரில், மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பம் இடவில்லையென தெரிவித்துள்ளார். அவரது இந்தக்கூற்று உண்மையானால், கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் அரைவாசிப்பேர் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்பதை தெரியப்படுத்துவதோடு, அந்தக் கடிதம் கூட்டமைப்பின் உத்தியோக பூர்வமானதொரு கடிதமல்ல என்பதையும் உறுதிப்படுத்துகின்றது. மேலும் போர்க்குற்ற விசாரணை மற்றும் இலங்கைக்கு காலவகாசம் வழங்குவது தொடர்பாக கூட்டமைப்பினரிடையே ஒத்த கருத்துக்கள் நிலவவில்லையென்பதையும் இது தெளிவாகக் காட்டுகின்றது.

ஐ. நா. சபை மனித உரிமை பேரவையில் தற்போது போர்க்குற்ற விசாரணையைக் கோரி நிற்கும் இந்தியா உட்பட பல மேற்கத்தைய நாடுகள் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கமாக தடைசெய்திருந்தன. இந்த மேற்கத்தைய நாடுகள் புலிகளை மாத்திரமல்ல Al-Qaida, IS போன்ற இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்களையும் பயங்கரவாதப்பட்டியலில் இணைத்து அவற்றின் மீது போர் புரிந்தும் வருகின்றன. இந்தப்போரில் இலட்சக்கணக்கான அப்பாவி மக்கள் ஏற்கனவே கொல்லப்பட்டு விட்டனர். அதற்கு இந்த நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தில் இது தவிர்க்கமுடியாதென்றே நியாயம் கற்பித்து வருகின்றன. ஆனால் இலங்கையோ புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் பொதுமக்களுக்கு ஒரு கீறல் விழாமல் நடாத்தியிருக்க வேண்டுமென்று இவர்கள் போர்க்குற்ற விசாரணையைக் கோருவதோடு நின்றுவிடாது, அது உள்ளக விசாரணையாக இருக்க முடியாதெனவும் கூறி வருகிறார்கள். மேலும் இலங்கையின் இறுதியுத்தம் 33 மாதகாலம் நீடித்தது. இந்த நீண்டகாலப்பகுதியில் மக்கள் பேரழிவினை தடுத்து நிறுத்த இவர்களாலும் ஐ.நா. சபையாலும் பல நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும். போரின் இறுதிக்கட்டத்தின்போது, ஐ.நா. சபை அக்கறை காட்டவில்லையென முன்னாள் ஐ.நா செயலாளர் நாயகம் பான் கி மூன் ஒப்புக்கொண்டுமுள்ளார். உரிய நேரத்தில் எதனையும் செய்யாது, நடந்து முடிந்த பின்னர் விசாரணை கோருவதிலிருந்து, இந்தக் கோரிக்கை கபடத்தனம் கொண்டது என்பது தெளிவாகத் தெரிகின்றது. காலந்தாழ்த்துவதால் கபடத்தனத்தை வெல்ல முடியாது.

**வானவில்**

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

**'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**இணையத்தளம்: http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

### தீண்டாமைக்கெதிரான 1966 ஒக்ரோபர் 21 எழுச்சியின் 50 ஆவது ஆண்டு நினைவாக:

# முன்னுதாரணமான ஒரு போராட்டத்தின் படிப்பினைகள்!

இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் 1966 ஒக்ரோபர் 21 இல் ஆரம்பமான தீண்டாமைக்கு எதிரான போராட்ட எழுச்சி ஏற்பட்டு 2016 ஒக்ரோபர் 21 ஆம் திகதியுடன் 50 வருடங்கள் பூர்த்தியாகி இருக்கிறது. இந்தப் போராட்டம் தமிழர்களின் போராட்ட வாழ்வில் ஒரு மைல் கல்லாகவும், பெறுமதியான படிப்பினைகளை வழங்கும் பொக்கிசமாகவும் திகழ்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து தமிழ் மக்கள் தமது இன உரிமைகளுக்காக முதலில் சாத்வீக வழியிலும், பின்னர் ஆயுதப் போராட்ட வழியிலும் போராடியிருக்கிறார்கள் எனப் பலரும் கூறுவதுண்டு. இந்தக் கூற்றில் ஓரளவு உண்மையும் உண்டு.

அதே நேரத்தில் சுதந்திரத்துக்கு முன்னரும், அதன் பின்னரும் தமிழ் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதினரான தாழ்த்தப்பட்ட மக்கள், தம்மீது திணிக்கப்பட்ட சாதி மற்றும் தீண்டாமை ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மனித உரிமை வேண்டிப் போராடிய வரலாறும் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதாக இருக்கின்றது.

அதாவது மொத்தத் தமிழினமும் தமது இன உரிமைகளுக்காக ஒரு பக்கத்தில் போராட, மறுபக்கத்தில் அவர்களுக்குள்ளேயே ஒரு பகுதியினர் தமது சக இனத்தவரிடமிருந்தே தமது உரிமைகளுக்குப் போராடும் நிலையும் இருக்கின்றது.
இதை இன்னொரு வகையிலும் பார்க்கலாம். அதாவது எப்படி ஒரு பெரிய இனம் தன்னைவிடச் சிறிய இனத்தை அடக்கிக் கொண்டு, அந்நிய ஆட்சியாளர்களிடமிருந்து தமக்கு சுதந்திரத்தை எதிர்பார்ப்பது முரணானதோ, அதேபோல ஒரு சிறிய இனம் தனது இனத்துக்குள்ளேயே ஒரு பகுதி மக்களை அடக்கி ஒடுக்கிக் கொண்டு பெரிய இனத்திடமிருந்து உரிமைகளை எதிர்பார்ப்பதும் முரணானதுதான்.




சில வேளைகளில் தமிழினத்தின் இன உரிமைகளுக்கான போராட்டம் தொடந்து தோல்வியைத் தழுவி வருவதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகவும் இருக்கக்கூடும் என எண்ணத் தோன்றுகிறது.

**முதலி சின்னையன்**

எது எப்படியிருப்பினும், 1966 ஒக்ரோபர் 21 இல் ஆரம்பமாகி சுமார் 5 ஆண்டுகள் வரை நீடித்த, வடக்கில் சூறாவளி எனச் சுழன்றடித்த தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் இருந்து கற்றுக் கொள்வதற்கு நிறை விடயங்கள் இருக்கின்றன. தமது தேசிய இனப் போராட்டத்தில் தோல்விக்கு மேல் தோல்வி கண்டுவரும் இலங்கைத் தமிழர்கள் மட்டுமின்றி, தென்னாசிய நாடுகளில் வாழுகின்ற பல இன சமூகங்களே இந்தப் போராட்டத்திலிருந்து கற்றுக் கொள்வதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன.

இந்தப் போராட்டத்தை விளங்கிக் கொள்வதற்கு முதலில் இந்தப் போராட்டம் உருவான வரலாற்றைச் சுருக்கமாகத் தன்னும் பார்ப்பது அவசியமாகும்.

இலங்கையின் வட பகுதியில் வாழுகின்ற தாழ்த்தப்பட்ட மக்களின் மீது அங்குள்ள உயர்சாதியினர், குறிப்பாக வெள்ளாள சாதியினர் செலுத்தி வருகின்ற சாதி ஒடுக்குமுறையும், தீண்டாமைப் புறக்கணிப்பும் மிகவும் கொடூரமானதும் நீண்ட வரலாற்றைக் கொண்டதுமாகும். இந்த ஒடுக்குமுறைக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் ஆரம்பத்தில் சில தனிநபர் ரீதியிலான போராட்டங்களையும், பின்னர் அமைப்பு ரீதியிலான போராட்டங்களையும் நடாத்தி வந்திருக்கின்றனர்.

இதில் சாதி வெறியர்களின் பலம் என்னவென்றால், அவர்களுக்கு அரசியல் ரீதியிலான ஒரு பலம் இருந்தமையே. தமிழர்களின் முதலாவது அரசியல் கட்சி என வர்ணிக்கப்படும் ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையில் செயல்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி வெளிப்படையாகவே சாதி அடிப்படையில் செயல்பட்ட, யாழ்ப்பாண சைவ வேளாள மேட்டுக்குடியினரைப் பிரதிநிதித்துவம் செய்த கட்சி.

அதேபோல, அக்கட்சியிலிருந்து வெளியேறிய எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையில் உருவாக்கப்பட்ட தமிழரசுக் கட்சியும் சொல்லளவில் "சாதி ஒழிய வேண்டும்" என்று சொன்னாலும், நடைமுறையில் சாதி அமைப்பைப் பாதுகாத்த, அதே யாழ். சைவ வேளாள மேட்டுக்குடியினரின் நலன்களைப் பாதுகாத்த ஒரு கட்சிதான். இதற்குப் பல உதாரணங்கள் உண்டு.

இந்த நிலையில் 1965 பொதுத் தேர்தலின் பின் ஏகாதிபத்திய சார்பு பிற்போக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் சிங்கள – தமிழ் இனவாதப் போக்குடைய 7 கட்சிகள்

சேர்ந்து அமைத்த கூட்டரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் இணைந்து கொண்டன. தம்மைப் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகள் இரண்டும் ஆட்சிப் பங்காளர்கள் ஆகியமை வட பகுதியில் இருந்த உயர்சாதி வெறியர்கள் மத்தியில் உற்சாகத்தைக் கிளப்பி விட்டது. சந்தர்ப்பத்தைப் பாரத்திருந்த அவர்கள் இந்தச் சூழலைப் பயன்படுத்தி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையை இறுக்கத் தொடங்கினர்.

திடீரென அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளில் இறங்கினர். பொதுவாக நிலமற்ற அந்த மக்கள் உயர்சாதியினரின் காணிகளிலேயே குடியிருந்து வந்தனர். அப்படி குடியிருந்த மக்களில் சிலர் அந்தக் காணிகளிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அவர்கள் தமது பிரதான ஜீவனோபாயத்துக்காக கள்ளுச் சீவி வந்த உயர்சாதியினரின் பனை, தென்னை மரங்களை வழங்க மறுத்தனர். சில இடங்களில் அவர்கள் கள்ளு சீவி வந்த மரங்களின் பாளைகளைத் தமது கைக்கூலிகள் மூலம் வெட்டியெறிந்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்தி வந்த கிணறுகளில் மலம் கொட்டப்பட்டது. பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் சாதி ரீதியாக அவமானப்படுத்தப்பட்டனர். பொது இடங்களில் அந்த மக்கள் தாக்குதலுக்கும் உள்ளாகினர். இந்த நடவடிக்கைகளில் எல்லா உயர்சாதி மக்களும் ஈடுபடாவிட்டாலும், ஊருக்குஊர் உயர்சாதியினரின் கைக்கூலிகளாகச் செயல்பட்ட 'சண்டியர்கள்' இதில் முன் நின்றனர்.

இந்தச் சூழ்நிலையில்தான், தாழ்த்தப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய சில அமைப்புகள் இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக அச்சுவேலியிலிருந்த தாழ்த்தப்பட்டவர் ஒருவருக்குச் சொந்தமான சினிமா கொட்டகையில் மாநாடு ஒன்றைக் கூட்டின. இந்த மாநாட்டுக்கு சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. மாநாட்டில் சில கட்சிகள் பங்குபற்றின. சில கட்சிகள் பங்குபற்றவில்லை. தமிழ் மக்களைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய பிரதான கட்சியான தமிழரசுக் கட்சி இதில் பங்குபற்றியது. பங்குபற்றிய இடதுசாரிக் கட்சிகளில் 'சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சி' என அழைக்கப்பட்ட புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி முக்கியமானது.

மாநாட்டில் சில முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படனவாயினும், அதை நடைமுறைப்படுத்துவதில் தமிழரசுக் கட்சியோ இதர கட்சிகளோ ஆர்வம் எதுவும் காட்டவில்லை. புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் விதிவிலக்காக இருந்தது. அக்கட்சி அந்த சர்வகட்சி மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் உறுதியுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்பட முன்வந்தது. அதன் தொடக்கப் புள்ளியாக, "சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற கோசத்துடன் சாதி அமைப்புக்கும் தீண்டாமைக்கும் எதிரான மாபெரும் கண்டன ஆர்பாட்ட ஊர்வலமொன்றை 1966 ஒக்ரோபர் 21 ஆம் திகதி சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரை நடாத்துவதென்றும், முடிவில் யாழ். முற்றவெளி மைதானத்தில் பகிரங்கப் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்துவதெனவும் அக்கட்சி தீர்மானித்தது.

ஆனால் பொலிசார் ஊர்வலத்துக்கு அனுமதி தர மறுத்துவிட்டார்கள். அதற்குக் காரணம் இருந்தது. ஆட்சியில் பிற்போக்கு ஐ.தே.க. இருந்தது. அந்த அரசின் பங்காளிகளாக சாதிவெறி பிடித்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகள் இருந்தன. வட பகுதியில் பணிபுரிந்த பெரும்பாலான தமிழ் பொலிசார் உயர்சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருந்ததுடன், தமிழ் கட்சிகள் இரண்டினதும் ஆதரவாளர்களாக இருந்தனர். எனவே அவர்கள் சாதி வெறியர்களின் சொற்படியே செயற்பட்டு வந்தனர்.

இருந்தும் சில சிங்கள பொலிஸ் அதிகாரிகள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது அனுதாபம் கொண்டிருந்தனர் என்பதையும் மறுப்பதற்கில்லை. உதாரணத்துக்கு ஒன்றைக் கூறலாம். ஊர்வலத்துக்கு அனுமதி கேட்டு அந்த நேரத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இருந்த சிங்கள இனப் பொலிஸ அதிகாரியை எமது தோழர்கள் அணுகிய போது, அனுமதி தர முடியாது என்ற அரசாங்கத்தின் உத்தரவை வருத்தத்துடன் தெரிவித்த அவர், "தடையை மீறி நீங்கள் ஊர்வலம் நடாத்தினால் தேவையேற்படின் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது" என்பதைத் தெரிவித்ததுடன், "இந்தச் சூழ்நிலையில் தடையை மீறி நீங்கள் ஊர்வலம் நடாத்தினால் இன்னொரு கந்தசாமி தினம் கொண்டாட வேண்டி வரும்" எனவும் எச்சரித்தார். அத்துடன் ஊர்வலத்துக்கு எதிராகப் பலாத்காரம் பிரயோகிப்பதைத் தான் விரும்பாததால் ஒரு வார காலம் விடுமுறையில் செல்லப் போவதாகக் கூறிய அவர், உண்மையிலும் அவ்வாறே செய்து தாழ்த்தப்பட்ட மக்கள் மீதுந்த அனுதாபத்தையும் எடுத்துக் காட்டினார்.

இங்கு அந்தப் பொலிஸ் அதிகாரி 'இன்னொரு கந்தசாமி தினம்' என்று குறிப்பிட்டது அர்த்தபுஸ்டியுடன் ஆகும். 1947 இல் அரசாங்க ஊழியர்கள் நடாத்திய பொது வேலைநிறுத்தத்தின் போது பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி என்ற தமிழ் அரசாங்க ஊழியர் பலியானார். அவரது தியாகத்தை மதித்து வருடாவருடம் 'தியாகி கந்தசாமி தினம்' என்ற மகுடத்தின் கீழ் அவர் இறந்த தினத்தை இலங்கைத் தொழிலாளி வர்க்கம் இன, மத, மொழி வேற்றுமைகளைக் கடந்து கொண்டாடுவது ஒரு வழமையாக இருந்து வந்தது. அதை மனதில் வைத்தே அந்தப் பொலிஸ் அதிகாரி அப்பொழுது புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் வட பிரதேச செயலாளராக இருந்த தோழர் வி.ஏ.கந்தசாமியை மனதில் கொண்டே அவ்வாறு கூறினார். என்னே அவரது ஒப்புவமை!

அந்த சிங்கள் பொலிஸ் அதிகாரி விடுமுறையில் சென்றதும், சுன்னாகம்

பொலிஸ் நிலையத்தில் உதவி பொலிஸ் அதிகாரியாக இருந்த இராசையா என்பவர் தற்காலிகப் பொறுப்பதிகாரியாகப் பொறுப்பேற்றார். இராசையா மிகவும் சாதி வெறி பிடித்தவர். ஏதாவது காரணங்களுக்காக தாழ்த்தப்பட்ட மக்கள் யாராவது கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கொண்டுவரப்பட்டால் அவர்களை அடித்து நொருக்குவதில் இன்பம் காண்பவர். அப்படியானவர் கைகளில் அதிகாரம் கொடுக்கப்பட்டால் சொல்லவா வேண்டும்? (இதே போன்ற தமோதரம்பிள்ளை என்ற பெயருடைய ஒரு சாதிவெறி பிடித்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் சங்கானை பொலிஸ் நிலையத்தில் இருந்தார்)

ஒக்ரோபர் 21 ஆம் திகதி ஊர்வலம் ஆரம்பிப்பதற்கு முன்னரே இராசையா தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்துவிட்டார். முதல் வேலையாக ஒரு நள்ளிரவு நேரத்தில் சுன்னாகத்தில் இருந்த புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக் காரியாலயத்துக்குச் சென்ற அவர், அங்கு தூங்கிக் கொண்டிருந்த காரியாலயப் பொறுப்பாளர் நா.யோகேந்திரநாதனையும், அவருடன் இருந்த ச.சுப்பிரமணியம் (இயக்கச்சி மணியம்) என்பவரையும் - இருவரும் முழுநேரமாக கட்சிப் பணி புரிவதற்காக முதல் வருடம்தான் படிப்பை இடை நிறுத்திய ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் மாணவர்கள் - கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு வந்து அவர்களைத் தூசணை வொர்த்தைகளால் திட்டியதுடன், விடியும் வரை அவர்கள் மீது தாக்குதலும் நடாத்திவிட்டே விடுதலை செய்தார்.

ஆனாலும் பொலிசாரின் தடையையும் மீறி கட்சி 1966 ஒக்ரோபர் 21 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகத்திலிருந்து ஊர்வலத்தை ஆரம்பித்தது. ஊர்வலத்தை சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் வழி மறித்த இராசையா தலைமையிலான பொலிசார், ஊர்வலத்தினர் மீது தடிகளாலும் துப்பாக்கிப் பிடிகளாலும் கடுமையாகத் தாக்கியதுடன், தோழர்கள் வி.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம், இ.கா.சூடாமணி ஆகியோரைக் கைது செய்து கொண்டு சென்று வழக்குத் தாக்கல் செய்தனர். தாக்குதலின் பின்னர் கோசமெதுவும் எழுப்பாமல் அமைதியான முறையில் இரண்டு இரண்டு போராகச் செல்லுமாறு பொலிசார் பணித்தனர். அதன் பின்னர் ஊரவலத்தினர் வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டியபடி யாழ்ப்பாண நகரம் வரை நடந்து சென்று அங்கு பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தினர். அங்கு உரையாற்றிய கட்சித் தலைவர்கள் பொலிசாரின் செயலைக் கடுமையாகக் கண்டனம் செய்து உரையாற்றினர்.

பொலிசாரால் நடாத்தப்பட்ட இந்த அராஜகம் தாழ்த்தப்பட்ட மக்களிடமும், முற்போக்கு சக்திகளிடமும் பெரும் கோபாவேசத்தைக் கிளறிவிட்டது. அதன் காரணமாக அவர்கள் மத்தியில் போராட்ட உணர்வு கிளர்ந்தெழுந்தது. இந்தச் சூழல் கட்சி மேற்கொள்ளவிருந்த எதிர்காலப் போராட்டங்களுக்கு பெரும் உந்துதலைக் கொடுத்தது. பொலிசாரின் சுன்னாகத் தாக்குதலைக் கண்டித்தும், சாதி அமைப்புக்கு எதிராகவும் கட்சி வட பகுதி முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்களையும், பொதுக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்து நடாத்தியது. இந்தக் கூட்டங்களில் வட பகுதித் தோழர்கள் மட்டுமின்றி, தென் பகுதியிலிருந்து சிங்கள, முஸ்லீம், மலையக முற்போக்கு சக்திகளும் பங்குபற்றி ஆதரவளித்தனர். குறிப்பாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கம்பஹா பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.டி.பண்டாரநாயக்க தலைமையிலான அக்கட்சியின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கே வந்து இந்தக் கூட்டங்களில் பங்குபற்றியதுடன், பாராளுமன்றத்திலும் பொலிசாரின் நடவடிக்கையைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதரவாகவும் உரையாற்றினர்.

ஆனால் அதே நேரத்தில் வட பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழரசு — தமிழ் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தை ஏறெடுத்தும் பார்க்காததுடன், சாதி வெறியர்கள் பக்கமும் சேர்ந்து நின்று கொண்டனர். தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் போராட்டத்தை கொச்சைப்படுத்தி பாராளுமன்றத்தில் பேசிய தமிழரசுக் கட்சி செயலாளர் அ.அமிர்தலிங்கம், "கம்யூனிஸ்ட்டுகள் வடக்கில் ஒரு சாங்காயை, ஒரு வியட்நாமை உருவாக்க முயல்கிறார்கள்" என அவதூறு செய்தார். தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகமோ தனது தொகுதியில் நடைபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசப் போராட்டத்திலிருந்து தப்புவதற்காக, தான் கிறிஸ்தவர் என்றும், எனவே சைவ சமயத்தவர்களின் விவகாரங்களில் தலையிட விரும்பவில்லையென்றும் கூறி நழுவிக் கொண்டார்.

ஆனால் இவர்கள் அனைவரதும் பல்வேறு தடைகளையும் மீறி புரட்சிகர கம்யூனிஸ்ட் தனது தலைமையில் உருவாக்கிய 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்' என்ற அமைப்பின் ஊடாக தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேச — தேநீர்க்கடைப் பிரவேசப் போராட்டத்தை துணிச்சலுடனும், உறுதியுடனும் முன்னெடுத்துச் சென்றது. இந்த தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் ஒரு சிறப்பு என்னவெனில், அதுவரை காலமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செயற்பட்ட அமைப்புகள் எல்லாமே முற்றுமுழுதாக அந்த மக்களாலேயே நடாத்தப்பட்டவையாகும். ஆனால் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தைப் பொறுத்தவரை, அதன் தலைமைப் பதவிகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் இருந்த அவேவேளையில், அதன் நிர்வாக சபைகளில் நல்லெண்ணம் படைத்த உயர் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து செயல்பட்டனர். இந்த நிலைமை இந்தப் போராட்டங்கள் கணிசமான வெற்றியைப் பெறுவதறங்கு ஒரு காரணமாகும்.

1966 முதல் 70 வரையிலான காலகட்டத்தில் வட பகுதி பூராவும் தீண்டாமைக்கு எதிரான சூறாவளி ஒரு

பிரளயமாகச் சுழன்றடித்தது. இந்தக் காலகட்டத்தில் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவில் உட்பட பெரியதும் சின்னதுமாக பல கோவில்களில் ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு, பல எதிர்ப்புகளை முறியடித்து இறுதியில் அவை வெற்றி பெற்றன.

அதேபோல, சுன்னாகம், சங்கானை, அச்சுவேலி, நெல்லியடி, சாவகச்சேரி, கொடிகாமம், மருதனாமடம், தாவடி உட்பட பல இடங்களில் தேநீர்க்கடைப் பிரவேசங்கள் நடாத்தப்பட்டு அவையும் வெற்றிபெற்றன.

அதே நேரத்தில் இந்தப் போராட்டங்கள் எதுவும் இலேசாகவோ, இழப்புகள் இன்றியோ நடந்து முடிந்துவிடவில்லை. சாதி வெறியர்கள் பக்கமும், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலும் சுமார் தலா பத்து பேர்வரையில் உயிர் பலி கொடுக்கப்பட்டே இந்தப் போராட்டங்கள் முடிவுக்கு வந்தன. போராட்டத்தின் மையக் களங்களாக சங்கானையிலுள்ள நிச்சாமம் கிராமம், மட்டுவிலுள்ள மானாவளைக் கிராமம், நெல்லியடியிலுள்ள கன்பொல்லை கிராமம் என்பன திகழ்ந்தன. உதாரணமாக போராட்டத்தில் முன்னணிப் படையாகத் திகழ்ந்த நிச்சாமம் கிராம மக்களின் வீரத்தைப் புகழ்ந்து, “சங்கானைக்கென் வணக்கம்” என்ற தலைப்பில் மட்டுநகர் கவிஞர் சுபத்திரன் எழுதிய ஒரு கவிதையில், “எச்சாமம் வந்து எதிரி நுழைந்தாலும் நிச்சாமக் கண்கள் நெருப்பெறிந்து நீறாக்கும்” எனச் சிலாகித்து எழுதியுள்ளார். இந்தக் கிராமங்களின் மக்கள் என்றென்றும் வரலாற்றில் அழிக்கப்பட முடியாத பெருமைக்குரியவர்கள்.

இன்று 50 வருடங்கள் கழிந்துவிட்ட போதிலும் இந்தப் போராட்டங்கள் வழங்கிய அனுபவப் பாடங்கள் வரலாற்றிலிருந்து மறைந்துவிடக் கூடியவை அல்ல. பண பலம், அதிகார பலம், ஆயுத பலம், சர்வதேச பலம் என அனைத்துப் பலங்களையும் பெற்றிருந்த தமிழ் தேசிய இனத்தின் 60 ஆண்டுகளுக்கும் மேலான போராட்டங்கள் தொடர்ந்து தோல்வியைத் தழுவி இன்று மிகவும் மோசமான ஒரு இக்கட்டான நிலையை வந்தடைந்துள்ள ஒரு சூழலில், மிகவும் பலவீனமான நிலையில் இருந்த ஒரு மக்கட்பிரிவான தாழ்த்தப்பட்ட மக்களின் தீண்டாமைக் கொடுமைக்கு எதிரான இப்போராட்டம் கணிசமான ஒரு வெற்றியைப் பெற்றதற்கான காரணம் என்ன என்பது சகலராலும், குறிப்பாகத் தமிழ் போராட்ட சக்திகளால் ஆராய்ந்து பார்க்கப்படுவது அவசியமாகும். அந்த வகையில் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் வெற்றி பெற்றதற்கான காரணிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- போராட்டத்துக்கு ஒரு சரியான மார்க்சிச — லெனினிச தலைமை வழங்கப்பட்டமை.
- அதுவரை காலமும் இருந்தது போல அல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களின் அடிமட்ட மக்கள் பூரணமாக அணிதிரட்டப்பட்டமை.
- ‘தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்’ என்ற பரந்துபட்ட ஒரு வெகுஜன அமைப்பின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் மட்டுமின்றி, நீதியை நேசித்த அனைத்து சமூக மக்களும் ஒரு அணியில் திரட்டப்பட்டமை.
- வெறும் சாத்வீகம் அல்லது வெறும் ஆயுத மோகம் என்றில்லாமல், வெகுஜனப் போராட்டத்துடன், தேவையான இடங்களில் ஆயுத பலாத்காரமும் பிரயோகிக்கப்பட்டமை.
- பொதுக்கூட்டம், ஊர்வலம், சுவரொட்டி, துண்டுப் பிரசுரம் என பரந்துபட்ட பிரச்சார இயக்கத்தை மக்களிடம் முன்னெடுத்தமை.
- கலை இலக்கியத்தை, நாடகம் – குறிப்பாக ‘கந்தன் கருணை’ என்ற நாடகம் – தெருக்கூத்து, கதை, கவிதை, கவியரங்கம், ஓவியக் கண்காட்சி, புகைப்படக் கண்காட்சி என சகல வடிவங்களிலும் போராட்டத்துக்கு ஆதரவாகப் பயன்படுத்தியமை.
- சம்பந்தப்பட்ட மக்கள் மட்டுமின்றி, நாட்டில் வாழுகின்ற ஏனைய இனங்களான சிங்கள, முஸ்லீம், மலையக மக்கள் மத்தியில் போராட்டத்துக்கு அனுதாபமான சூழலை புரட்சிகரக் கட்சியின் துணையுடன் உருவாக்கியமை.

இவைதான் இந்தப் போராட்டம் வெற்றிக்கு இட்டுக் செல்ல உதவிய காரணிகளாகும். அதேநேரத்தில் தமிழ் மக்களின் தேசிய இன விடுதலைக்கான போராட்டம் தொடர்ந்தும் ஏன் தோல்வியைத் தழுவி வருகின்றது என்பதை ஒப்பீட்டு வகையில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் இந்தக் காரணிகள் உறுதுணையாக இருக்க முடியும். குறிப்பாக, ஒரு போராட்டத்தின் வெற்றிக்கு அதற்குத் தலைமை தாங்கும் சக்தியின் வர்க்கக் குணாம்சம், அது பின்பற்றும் சித்தாந்த — அரசியல் மார்க்கமும் வழிமுறையும், அது அணிதிரட்டும் நேச சக்திகள், என்பவை மிக முக்கியமானவையாகும். இவை யாதொன்றும் தமிழ் மக்களின் தேசிய இனப் போராட்டத்துக்கு இல்லையென்பதே அதன் தொடர் தோல்விக்குக் காரணம் என அடித்துக் கூற முடியும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் தீண்டாமைக்கு எதிரான 1966 ஒக்ரோபர் 21 எழுச்சி ஆரம்பமாகி இன்று 50 வருடங்கள் பூர்த்தியாகிவிட்ட சூழ்நிலையில், தமிழ் மக்கள் வாழ்விலும் அவர்களில் ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்விலும், உலக அரங்கிலும் எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. தாழ்த்தப்பட்ட மக்கள் தமது உரிமைப்

போராட்டங்களில் பல வெற்றிகளைப் பெற்று ஓரளவுக்கு அடிமை குடிமை முறையினின்று மீண்டுவிட்டாலும், அந்த மாற்றங்கள் புறச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் மட்டுமே. அகச் சூழலைப் பொறுத்தவரை ஆழமான சாதி மனோபாவமும் தீண்டாமைச் சிந்தனையும் நீறுபூத்த நெருப்பாக யாழ்ப்பாண மேட்டுக்குடியினரின் சிந்தனையில் இன்னமும் கனன்று கொண்டு இருப்பது மறுக்க முடியாத உண்மை.

சமூகப் புரட்சி ஒன்றின் மூலம் அமைகின்ற ஒரு சோசலிச சமத்துவ சமுதாயத்தின் உருவாக்கத்திலும், அதன் நீட்சியிலுமே அதற்கான இறுதி வெற்றியைப் பெற முடியும். அதேபோல தமிழ் மக்களின் தேசிய இன விடுதலையும், உழைக்கும் மக்களின் வர்க்க விடுதலையும் கூட அந்த மாற்றத்திலேயே தங்கியுள்ளது. சாராம்சமாகச் சொல்வதானால், உழைக்கும் மக்களின் விடுதலை, ஒடுக்கப்பட்ட தமிழ் தேசிய இனத்தின் விடுதலை, தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலை, ஒடுக்கப்பட்ட பெண்களின் விடுதலை என எல்லா ஒடுக்குமுறைகளிலிருந்தும் விடுதலை பெறுவதற்கான ஒரே வழி இவர்களின் தனித்தனியான போராட்டங்களை ஒரு சோசலிச இலட்சியத்தை நோக்கி ஒன்றிணைப்பதிலேயே தங்கி இருக்கின்றது.

# இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களில் 94 பேர் சாதாரண பரீட்சையில் கூட சித்தியடையாதவர்கள்!

“இலங்கை நாடாளுமன்றத்தின் 225 உறுப்பினர்களில் 94 பேர் சாதாரண பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் (G.C.E – O/L) கூட சித்தியடையாதவர்கள். 25 பேர் மட்டுமே பட்டதாரிகள்” இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடொன்றில் கூறியிருக்கிறார் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தர் பேராசிரியர் எம்.ஓ.ஏ. டி சொய்சா. மேலும் அவர் கூறுகையில்:

“நாடாளுமன்றம் என்பது சட்டங்களை இயற்றும் ஒரு இடம். எனவே இதன் உறுப்பினர்கள் தமது கடமைகள் பற்றி தெளிவான விளக்கமுடையவர்களாகவும் புத்திசாதுரியமானவர்களாகவும், மரியாதைக்குரியவர்களாகவும் இருக்க வேண்டும். பொதுமக்களின் வரிப்பணம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வசதிகளுக்காகச் செலவழிக்கப்படுகிறது. அவர்கள் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றும் போது, ஒரு அமர்வுக்கு 2,500 ரூபா விசேட படியாக வழங்கப்படுகிறது. அத்துடன் உயர்தரமான உணவும் வழங்கப்படுகிறது. எனவே அவர்கள் தமது கடமைகளை உணர்ந்து பொறுப்புடன் செயல்பட வேண்டும். ஆனால் ஒவ்வொரு முறை நாடாளுமன்றம் கூடும்போதும் ஒன்றிரண்டு மணித்தியாலங்கள் கூச்சல் குழப்பத்தில் செலவாகின்றது. புதிய உறுப்பனர்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய சிரேஸ்ட உறுப்பினர்களே இவ்வாறு நடந்து கொள்கின்றனர்”.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் டாக்டர் றெறன்ஸ் புறசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

“இலங்கை பிரித்தானிய நாடாளுமன்றத்தால் நீண்ட காலத்துக்கு முன்னரே உருவாக்கப்பட்ட பாரம்பரியமான நடைமுறைகளையே பின்பற்றுகிறது. அதன் அடிப்படையில் நாடாளுமன்ற விவகாரங்களை எப்படி நடாத்த வேண்டும் என்ற நிலையியற் கட்டளைகள் இருக்கின்றன. அவற்றைப் பின்பற்றியே நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயல்பட வேண்டும். ஆனால் அவர்கள் இன்று அப்படிச் செயல்படுவது இல்லை” எனக் கூறினார்.

# தோழர் ச.முத்துலிங்கம் மறைவுக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தோழர் சண்முகம் முத்துலிங்கம் அவர்கள் தமது 77ஆவது வயதில் 2017 பெப்ருவரி 14ஆம் திகதி காலமானார் என்பதை வருதத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழர் முத்துலிங்கம் 1960களில் புரட்சிகர இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து செயல்பட்ட ஒருவராவார். காலஞ்சென்ற பேராசிரியர் க.கைலாசபதி அவர்களுடன் நெருங்கிய தொடர்பை கொண்டிருந்த அவர், முற்போக்கு கலை இலக்கிய செயல்பாடுகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

சிறந்த ஆங்கில ஆசிரியரான தோழர் முத்துலிங்கம், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி என்பனவற்றிலும், பல வருட காலம் மாலைதீவுகளிலும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்துள்ளார். சிறந்த அறிவுஜீவியான அவர் பல்துறை செயல்பாடுகளில் ஈடுபட்ட ஒருவராவார்.

தோழர் முத்துலிங்கம் அவர்களின் மறைவையொட்டி எமது புரட்சிகர அஞ்சலியைச் செலுத்துவதுடன், அவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழில் அச்சான முதல் நூல்!

உலக வரலாற்றில் முதலாவது தமிழ் நூல் 1554 ஆம் ஆண்டு பெப்ருவரி 11 ஆம் நாள் போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் தான் வெளியிடப்பட்டது. அதன் பெயர் போர்த்துக்கீச மொழியில் Cartilha Lingoa Tamul e Portugues என்பதாகும். இதன் தமிழ் அர்த்தம் ''தமிழ் மொழியிலும் போர்த்துக்கீசியத்திலும் அமைந்த (திருமறை) சிற்றேடு'' என்பதாகும். இந்த நூலில் தமிழ் சொற்கள் லத்தீன் மொழியில் அச்சிடப்பட்டிருந்தன.

இந்த நூல்தான் இந்திய மொழியொன்றிலிருந்து ஐரோப்பிய மொழிக்கு மாற்றம் செய்யப்பட்ட முதல் நூல் என செக்கோஸ்சிலோவாக்கியாவின் தமிழ் அறிஞர் கமில் சுவெலபில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழில் முதலாவதாக அச்சேறிய இந்தப் புத்தகம் ரஸ்யா (1563), ஆபிரிக்கா (1624) மற்றும் கிரீஸ் (1821) ஆகிய நாடுகளில் முதன்முதலாக அச்சிட்ட நூல்களின் காலத்தை விட முந்தையதாக இருக்கின்றது.

# இந்தியப் பொருளாதாரமும் பிரித்தானியப் பொருளாதாரமும்!

இந்தியாவின் பொருளாதாரம் கடந்த 100 வருடங்களில் முதல் முறையாக பிரித்தானியாவின் பொருளாதாரத்தை விட அதிகரித்துள்ளது. பிரித்தானியா அதற்கு முதல் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார சக்தியாக இருந்துள்ளது.

2016 இல் பிரித்தானியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தி 2.29 றில்லியனாக (Trillion) இருந்துள்ளது. ஆனால் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சற்றுக் கூடுதலாக 2.30 றில்லியனாக இருந்துள்ளது. இந்த இடைவெளி இன்னும் கூடுவதற்கு சாத்தியம் உண்டு. ஏனெனில் இந்தியாவின் வருடாந்த பொருளாதார வளர்ச்சி வீதம் 6 முதல் 8 வரையாக




இருக்கின்றது. ஆனால் பிரித்தானியாவின் வளர்ச்சி வீதம் 1 முதல் 2 வரையுமே இருக்கின்றது.

# குழந்தைகள் பற்றி கவிஞர் கலில் ஜிப்ரான்

''உங்கள் குழந்தைகள் உங்கள் குழந்தைகள் அல்லர்

அவர்கள் உங்கள் மூலமாக வந்தவர்களே

அல்லாமல் உங்களிலிருந்து வந்தவர்கள் அல்லர்

அவர்கள் உங்களுடனே இருந்தபோதிலும் உங்களுடைய உடமைகள் அல்லர்

நீங்கள் அவர்களுக்கு உங்கள் அன்பை மட்டுமே கொடுக்கலாம்

உங்கள் எண்ணங்களை அல்ல

ஏனெனில், அவர்களுக்கு வேறு எண்ணங்கள் உள்ளன

நீங்கள் அவர்களைப் போல் இருக்கப் போராடலாம்

ஆனால் உங்களைப் போல் அவர்களை ஆக்க முயலாதீர்கள்

ஏனெனில், வாழ்க்கை பின்னோக்கிப் போவதுமில்லை

நேற்றோடு தங்கிவிடத் தாமதிப்பதுமில்லை''.

# ஐ.நாவின் புதிய செயலாளர் நாயகம்

ஐ.நாவின் புதிய செயலாளர் நாயகமாக முன்னாள் போர்த்துக்கல் பிரதமரான 67 வயது நிரம்பிய அன்ரோனியோ குற்றேர்றெஸ் (Anto'nio Guterres) நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் முன்னர் 1995 முதல் 2002 வரை ஐ.நாவின் அகதிகள் நிறுவனத்தின் தலைவராகப் பதவி வகித்துள்ளார். நான்கு மொழிகளில் சரளமாகப் பேசக்கூடியவர்.

போர்த்துக்கலில் 50 ஆண்டுகள் நீடித்த சலசாரின் பாசிச சர்வாதிகார ஆட்சி மக்கள் கிளர்ச்சியால் 1976 இல் முடிவுக்கு வந்து அங்கு முதலாளித்துவ ஜனநாயக பாராளுமன்ற ஆட்சி உருவான போது முதன்முறையாக மக்கள் பிரதிநிதிகள் சபை உறுப்பினரான குற்றேர்றெஸ் பின்னர் அந்நாட்டின் பிரதமரானார்.

# உலகின் விதவைகள் தொகை!

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள ஒரு புள்ளிவிபரத்தின்படி, உலகச் சனத்தொகையில் 259 மில்லியன் பேர் விதவைகள் ஆவர். இவர்களில் அரைவாசிப் பேர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். வறுமை மட்டுமின்றி பாலியல் வன்முறை, ஊதாசீனம் என்பனவற்றுக்கும் உள்ளாகின்றனர்.

# கனடாவில் குடியேறிகள்

கனடாவில் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ள புதிய சனத்தொகைப் புள்ளிவிபரங்களின்படி இன்னும் 20 வருடங்களில், அதாவது 2036 ஆம் ஆண்டு வாக்கில் கனடிய சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் வெளிநாடுகளில் இருந்து வந்து குடியேறியவர்களாக இருப்பர்.

இவர்களில் 50 சதவீதத்தினர் ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்களாக இருப்பர். 2036 இல் மொத்தச் சனத்தொகையில் 20 சதவீதத்தினர் குடியேற்றவாசிகளுக்குப் பிறந்த பிள்ளைகளாக இருப்பர்.

சனத்தொகையில் 13 – 16 இடைப்பட்ட சதவீதத்தினர் கிறிஸ்தவம் அல்லாத மதங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பர்.

# ஒலிவ் எண்ணெயின் மகத்துவம்

மத்தியதரைக் கடல் பகுதியில் உள்ள நாடுகளில் வாழும் மக்கள் இருதய நோய், புற்றுநோய் என்பனவற்றின் தாக்கம் அதிகம் இல்லாமல் நீண்டகாலம் வாழுவதற்கு அவர்கள் தமது அன்றாட உணவில் ஒலிவ் எண்ணெய் சேர்த்துக் கொள்வதே காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

ஒலிவ் எண்ணெயில் மற்றைய எல்லா எண்ணெய் வகைகளையும் விட மிகச் சிறப்பான தாவர அடிப்படையிலான நல்ல கொழுப்பு இருப்பதால், இது உடல் நலத்தைப் பாதுகாப்பதில் பல வழிகளில் உதவுகிறது. அத்துடன், எலும்பு சம்பந்தமான நோய்களுக்கும் ஒலிவ் எண்ணெய் தகுந்த நிவாரணி எனக் கண்டறியப்பட்டுள்ளது.

# தமிழகத்தின் மற்றொரு சாதனை!

வருடந்தோறும் சுமார் 80,00,000 பேர் தற்கொலை செய்வதாக அறிவித்துள்ளது உலக சுகாதார நிறுவனம்.

இந்தியாவில் சராசரியாக 4 நிமிடங்களுக்கு ஒருவர் தற்கொலை செய்து கொள்கின்றார். தற்கொலை செய்து கொள்வோரின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, முழு இந்தியாவிலும் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

# 100 கோடி இந்தியர்களுக்கான பத்திரிகைகளின் தொகை!

இந்தியப் பத்திரிகைகளின் பதிவாளர் வெளியிட்டுள்ள புள்ளிவிபரங்களின்படி, 31 – 03 – 2013 வரை இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட தினசரிப் பத்திரிகைகளின் எண்ணிக்கை 12,511 ஆகும். மற்றைய பருவ இதழ்களின் எண்ணிக்கை 81,556 ஆகும். மொத்த வெளியீடுகளின் எண்ணிக்கை 94,067 ஆகும்.

## யாகூ பாவனையாளர்களுக்கு…

யாகூ (Yahoo) தொழில்நுட்ப நிறுவனம் சமீபத்தில் வெளியிட்டுள்ள ஒரு தகவலின்படி, 2013 இல் தகவல்களைத் திருடுபவர்களால் அதன் ஒரு பில்லியன் பாவனையாளர்களின் தகவல்கள் திருடப்பட்டுள்ளன.

# கம்பனிகளிலும் திருடர்கள் கைவரிசை!

லண்டனைத் தளமாகக் கொண்டுள்ள லியோட்ஸ் (Lloyds) காப்புறுதி குழுமம் வெளியிட்டுள்ள தகவலின்படி, தகவல்களைத் திருடுபவர்களின் செயலால் ஆண்டுதோறும் கம்பனிகளுக்கு சுமார் 400 பில்லியன் டொலர்கள் இழப்பு ஏற்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

# நகரங்கள்தான் நாசகாரிகளா?

உலகின் மொத்த நிலப்பரப்பில் நகரங்கள் வெறுமனே 2 சதவீத பரப்பளவைக் கொண்டிருக்கிற போதும், அந்நகரங்களில் இருந்து வெளியாகும் பசுமை வாயுக்களின் (Green house Gas Emissions) தொகை, உலக பசுமை வாயு வெளியேற்றத்தில் 70 சாவீதத்தைக் கொண்டிருக்கின்றன.

## தென் சீனக் கடலின் முக்கியத்துவம்

சீனா உரிமை கோரி வரும் தென் சீனக் கடலுக்கு பிலிப்பைன்ஸ், வியட்நாம், தய்வான், மலேசியா போன்ற நாடுகளும் உரிமை கோரி வருவதால் அப்பிரச்சினை கொந்தளிப்பான ஒன்றாக மாறியுள்ளது. போதாததிற்கு அமெரிக்காவும் அதற்குள் தனது மூக்கை நுழைத்துள்ளது.

இந்தக் கடல் பிரதேசத்தின் முக்கியத்துவத்துக்கு அப்பகுதியில் உள்ள அபரிமிதமான கடல் வளமும், எண்ணெய் வளமும் மாத்திரமின்றி, உலகின் கடல் மார்க்கமான வர்த்தகத்தில் 30 சதவீதம் அப்பகுதியால் நடைபெறுவதும் காரணமாகும்.

## அறைகூவல்

பட்டினிக் கொடுஞ்சிறைக்குள் பதறுகின்ற மனிதர்காள்

பாரிற் கடையரே, எழுங்கள் வீறுகொண்ட தோழர்காள்

கொட்டு முரசு கண்ட நம் முழக்கம் எங்கும் குமுறிட

குதித்தெழு புதியவுலகை வாழ்வதில் திளைத்திட

பண்டைய முழக்கமென்னும் சங்கிலி அறுந்தது

பாடுவீர் சுயாட்சி கீதம் விடுதலை பிறந்தது

இங்கு புதிய முறையிலே இப்புவனமும் அமைந்திடும்

இன்மை சிறுமை தீர நம் இளைஞருலகமாகிடும்.

**-பிரெஞ்சு கவிஞன் யூஜின் பட்டியர்**

# 160 கோடி ஆண்டுப் பழமையான பாசி

இந்தியாவில் 160 கோடி ஆண்டுகள் பழமையான பாசி கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேசத்தில் சித்திரகூட் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தப் பாசிதான், பூமியின் மிகப் பழமையான தாவரமாக இருக்கக்கூடும் எனச் சொல்லப்படுகிறது. இதற்கு முன்பு கண்டுபிடிக்கப்பட்டது 120 கோடி ஆண்டுகள் பழமையான பாசி. இந்தக் கண்டுபிடிப்பின் மூலம் மரங்கள் உண்டான வரலாற்றைக் கண்டறிய முடியும் என விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர். இந்தக் கண்டுபிடிப்பு ‘PLOS Biology’ இதழில் வெளியாகியுள்ளது.

# ஒளிரும் தவளை

உலகின் முதல் ஒளிரும் தவளை அர்ஜெண்டினாவில் சாண்டஃபே என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காலை வெளிச்சத்தில் பச்சை, மஞ்சள், சிவப்பு நிறத்தில் இருக்கும் இந்தத் தவளைகள் இரவில் நீலம், பச்சை நிறங்களை வெளிப்படுத்துபவையாக உள்ளன. ‘Proceedings of the National Academy of Sciences’ என்னும் இதழில் இது குறித்த ஆய்வு வெளியாகியுள்ளது.

படித்ததில் இரசித்தது:

# ‘எரியும் பனிக்காடு’ (Red Tea) என்றொரு நாவல்!


அண்மையில் ‘எரியும் பனிக்காடு’ (Red Tea) என்றொரு நாவல் படிக்கக் கிடைத்தது. *பி.எச்.டேனியல் (1910 – 2003) என்பவர் இதை 1969ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டிருக்கிறார். முதலில் இந்த எழுத்தாளர் பற்றிய அறிமுகத்தைத் தருவது நல்லது என நினைக்கின்றேன். அதை அவரது வார்த்தைகளிலேயே தருவது மேலும் சிறப்பாக இருக்கும். இந்த நாவலின் முதலாவது பதிப்புக்கு 1969இல் எழுதிய முன்னுரையில் பின்வருமாறு அவர் கூறுகிறார்:*

*“1941 லிருந்து 1965 வரை 25 ஆண்டுகள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்திருக்கிறேன். இந்தக் காலகட்டத்தில் 1900 லிருந்து 1930 வரைத் தோட்டங்களில் பணிபுரிந்த பலரைப் பேட்டி கண்டிருக்கிறேன். அக்காலத்தில் அவர்கள் பணிபுரிந்த சூழ்நிலைகள் குறித்து அவர்களிடமிருந்து எழுத்துபூர்வமான வாக்குமூலங்களும் பெற்று இருக்கிறேன். அவற்றின் அடிப்படையிலேயே இந்நூல் எழுதப்பட்டுள்ளது”.*

*இந்த நாவலை தமிழில் வெளியிட்ட கோயம்புத்தூரில் இயங்கும் ‘விடியல்’ பதிப்பகம் இந்த நாவலின் ஆசிரியர் பி.எச்.டேனியல் பற்றி பின்வருமாறு கூறுகிறது:*

*“1940 ஆம் ஆண்டு தலைமை மருத்துவ அதிகாரியாக வால்பாறை காரமலை எஸ்டேட்டில் கால்பதித்த நூலாசிரியர், அங்கு நிலவிய சகிக்கவே முடியாத மனிதத்தன்மையற்ற சூழலைக் கண்டு பின்வாங்கிவிடாமல் நின்று போராட உறுதி கொண்டார். அவரது தலைமையின் கீழ் ‘தென்னிந்தியத் தோட்ட உத்தியோகஸ்தர்கள் சங்கம்’ தென்னகம் முழுவதும் விரிந்து பரவியது. முன்பு நினைத்தே பார்க்க முடியாதவையாகவிருந்த ஏராளமான உரிமைகளை வென்றெடுத்தது”.*

நாவலாசிரியரதும்,வெளியீட்டாளர்களினதும்




இந்த இரண்டு குறிப்புகளுமே இந்த நாவலின் சாரத்தை விளக்கப் போதுமானவை.

இந்த நாவல் இந்தியாவை பிரித்தானியர் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் வால்பாறை உட்பட நீலகிரி மலைப்பிரதேசத்தில் அவர்கள் உருவாக்கிய தேயிலைத் தோட்டங்களில் தமிழகக் கிராமப்புறத்து மக்கள் எப்படி மாட்டு மந்தைகளையும் விடக் கேவலமாக அந்தத் தேயிலைச் செடிகளுக்கு உரமாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மிகவும் உணர்வுபூர்வமாகச் சித்தரிக்கிறது.

பிரித்தானிய தோட்ட அதிகாரிகளும், அவர்களுக்கு பஞ்சத்தால் வாடிய தமிழகக் கிராமப்புற மக்களை ஆசை வார்த்தை காட்டி ஏமாற்றி அழைத்துச் சென்று கொடுத்து, தேயிலைத் தோட்டங்களில் நினைக்கவே முடியாத ஈவிரக்கமற்ற முறையில் அவர்களைக் கொத்தடிமைகளாக்கிய தமிழ் கங்காணிமார்களும் செய்த அட்டூழியங்களை, இந்த நாவல் நாம் நேரடியாகவே அனுபவிக்கும் உணர்ச்சி உணர்வுகளுடன் மிகவும் அருமையாகச் சித்தரித்திருக்கிறது.

இந்த நாவலில் வரும் கதாபாத்திரங்கள் வேண்டுமானால் கற்பனையாக இருக்கலாம். ஆனால் சம்பவங்கள் அங்கு டாக்டராகப் பணியாற்றிய நூலாசிரியர் டேனியல் அவர்கள் நேரடியாகக் கண்டு கேட்டு உண்மையில் அனுபவித்தவையே என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

உலகத்துக்கு நவீன தொழிற்துறையையும், நாகரீகத்தையும், ஜனநாயக ஆட்சி முறையையும், சீரான நிர்வாக முறையையும் பரிசாக வழங்கியதாகப் பெருமை பேசும் பிரித்தானிய ஏகாதிபத்தியக் கொடுங்கோலர்கள், இந்தியா, இலங்கை, மலேசியா, பிஜித்தீவகள் போன்ற நாடுகளில் தமது தேயிலை, இறப்பர், கொக்கோ, கரும்புத் தோட்டங்களை உருவாக்கி செல்வத்தைச் சுரண்டிக் குவிப்பதற்கு எப்படி ஏழை எளிய தமிழகக் கிராமப்புற மக்களை, பேசவே நாக்கூசும் அளவுக்கு நாயாய் கசக்கிப் பிழிந்தார்கள் என்பதற்கு இந்த நாவல் ஒரு அருமையான உதாரணமாக இருக்கிறது.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் ஒரு வைத்திய அதிகாரி நினைத்திருந்தால், பிரித்தானிய அதிகாரிகளுடன் சேர்ந்து எத்தனையோ விதமான சுகபோகங்களை அனுபவித்திருக்கலாம். ஆனால் டேனியல் என்ற இந்த வைத்திய அதிகாரி, ஏனைய இந்திய தேசியவாதிகள் இந்திய சுதந்திரத்துக்காகப் போராடிக் கொண்டிருந்த வேளையில், நாயிலும் கேவலமாக நடாத்தப்பட்டுக் கொண்டிருந்த ஒருபகுதி மக்களின் வாழ்க்கைப் போராட்டத்துக்கு தானே நேரடியாகத் தலைமைதாங்கி தன்னலம் இல்லாத சேவையை வழங்கியிருக்கிறார்.

அவருடைய நேரடிப் பங்களிப்பின் காரணமாகவே இந்த நாவலை மிகவும் உயிரோட்டமுள்ள ஒன்றாக, வாசிப்பவர்களின் இதயத்தைத் தொட்டுக் கண்ணீர் வரவழைக்கும் முறையில் எழுதியிருக்கிறார். உண்மையில் அவரது முயற்சிக்காக இந்திய தொழிலாளி வர்க்கமும், குறிப்பாகத் தோட்டத் தொழிலாளர்களும், தமிழ் இலக்கிய உலகமும் அவருக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளது.

தமிழிலும் அழியாப் புகழ்பெற்ற அமர காவியங்களைப் படைக்க முடியும் என்பதற்கு பி.எச்.டேனியல் அவர்களின் ‘எரியும் பனிக்காடு’ அல்லது ஆங்கிலத்தில் Red Tea என்ற இந்த நாவல் ஒரு சான்றாக இருக்கின்றது.

**–கங்கை**

# ஐ.நா. பாதுகாப்புச் சபைத் தீரமானத்தால் தனிமைப்பட்டுப் போன இஸ்ரேல் அரசு!

**க**டந்த 8 வருடங்களில் முதல் தடவையாக இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள பாலஸ்தீனப் பகுதிகளான மேற்குக்கரை (West Bank), ஜெருசேலம் (Jerusalem) என்பனவற்றில் மேற்கொண்டு வரும் யூதக் குடியேற்றங்கள் சட்டவிரோதமானவை என ஐ.நா. பாதுகாப்புச்சபை தீர்மானம் (எண்-2334) நிறைவேற்றியுள்ளது. இந்தத் தீர்மான நிறைவேற்றத்தில் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில், 2001இல் இதுபோன்ற ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்ட போது தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்திய அமெரிக்காவின் ஒபாமா நிர்வாகம், இம்முறை அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தாது தீர்மானம் நிறைவேற வாய்ப்பளித்துள்ளது.

அமெரிக்காவின் இந்த நிலைமாற்றத்துக்குக் காரணம், இதுவரை காலமும் இஸ்ரேலின் மிக மோசமான வலதுசாரி அரசாங்கமான பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகுவின் நிர்வாகத்தை அமெரிக்கா ஒரு செல்லப்பிள்ளையாகவே நடாத்தி வந்தது. இருப்பினும் அமெரிக்காவின் சிறு விமர்சனத்தைக்கூட நெத்தனியாகு ஏற்கத் தயாராக இல்லாமல் இருந்ததுடன், அமெரிக்க அரசின் மூத்த அதிகாரிகளைக் கூட உதாசீனப்படுத்தியே வந்தது. அந்த அதிருப்தியின் காரணமாகவே இம்முறை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இஸ்ரேலைப் பாதுகாக்க அமெரிக்கா முன்வரவில்லை எனக் கூறப்படுகிறது.

உண்மையில் இஸ்ரேல் - பாலஸ்தீனப் பிரச்சினையில் தன்னை ஒரு "நேர்மையான, நடுநிலைமையான சமாதான மத்தியஸ்தர்" என அமெரிக்கா கூறிக்கொண்டாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அமெரிக்கா ஒருபக்கச் சார்பாக இஸ்ரேலுக்கு ஆதரவாகவே செயல்பட்டு வந்திருக்கிறது. இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் நிறுவப்படும் சட்டவிரோத யூதக் குடியிருப்புகளுக்கு அமெரிக்காவின் ஆசிர்வாதம் எப்போதும் மறைமுகமாக இருந்தே வந்திருக்கிறது. அதுமாத்திரமின்றி, இஸ்ரேல் இராணுவம் சட்டவிரோத யூதக் குடியிருப்புகளைப் பாதுகாப்பதற்கும், பாலஸ்தீனர்களை ஒடுக்குவதற்கும் அமெரிக்கா பெருமளவிலான இராணுவ உதவிகளை வழங்கியும் வந்திருக்கிறது.




இருப்பினும் ஜோர்ஜ் டபிள்யு.புஸ் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இஸ்ரேலுக்கு எதிரான ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அதேபோல அவரது தகப்பனார் ஜோர்ஜ் எச்.டபிள்யு.புஸ் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் இஸ்ரேலை விமர்சித்து ஒன்பது தீர்மானங்கள் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

*யாசின்*

தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள கண்டனத் தீர்மானத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் சட்டவிரோதமாக யூதக் குடியேற்றங்களை மேற்கொள்வதானது, "சமாதானத்துக்கு பெரும் இடையூறு" என்றும், "சர்வதேசச் சட்டங்களை அப்பட்டமாக மீறும் செயல்" என்றும், "இரண்டு அரசுகள் என்ற நோக்கத்துக்கு ஆபத்தான அச்சுறுத்தல்" என்றும், பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது. அத்துடன் ஆக்கிரமிக்கட்ட பகுதிகளில் இஸ்ரேல் மேற்கொள்ளும் குடியேற்றங்களை இஸ்ரேல் உடனடியாகவும், முற்றுமுழுதாகவும் நிறுத்த வேண்டும் எனவும் பாதுகாப்புச் சபை கோரியுள்ளது.

தற்போது ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மேற்குக் கரையில் இஸ்ரேல் 196 சட்டவிரோதக் குடியிருப்புகளை உருவாக்கியுள்ளதுடன், கேந்திர முக்கியத்துவம் உள்ள இடங்களில் நூற்றுக்கணக்கான காவல் நிலைகளையும் அமைத்துள்ளது. சமீபத்தில் ஜெருசெலம் மாநகர சபை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மேலதிகமாக 300 வீடுகளை நிர்மாணிக்கப் போவதாக அறிவித்திருக்கிறது.

ஐ.நா. பாதுகாப்புச் சபை இதுவரை பல கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றியிருந்தாலும், இஸ்ரேல் பாலஸ்தீனர்களுக்கு எதிரான தனது ஆக்கிரமிப்புகளையும், அடாவடித்தனங்களையும் நிறுத்துவதாக இல்லை. அது தொடர்ந்தும் மூர்க்கத்தனமாக அந்த வழியிலேயே பயணித்து வருகிறது. அமெரிக்கா போன்ற வல்லரசு நாடுகள் கடந்த காலத்தில் தமக்குப் பிடிக்காத கியூபா, வட கொரியா, ஈராக், ஈரான், சிரியா போன்ற நாடுகள் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து வந்துள்ளன. அதுபோன்ற கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்து, இஸ்ரேலிய சியோனிச ஆக்கிரமிப்பு அரசை சர்வதேச அரங்கிலிருந்து தனிமைப்படுத்தினால் மட்டுமே, அதன் போக்கை ஓரளவாவது கட்டுப்படுத்த முடியும். ஆனால் அமெரிக்கா அதைச் செய்யுமா என்பதுதான் கேள்வி.

# இரண்டு மாதங்களில் கொழும்பில் 49 ஆர்ப்பாட்டங்கள்!

இலங்கையில் தற்போதைய 'நல்லாட்சி' அரசாங்கம் பதவியேற்ற நாளிலிருந்து தினசரி போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடைபெறாத நாளே இல்லை என்ற அளவுக்கு நிலைமை மாறியுள்ளது. இந்த நிலைமை பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் அரசாங்கத் தலைவர்கள், தமது அரசாங்கத்தில் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டதால்தான் மக்கள் பயபீதி எதுவுமின்றி போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள் எனப் பெருமை பேசுகின்றனர். இது 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதையாக இருக்கின்றது.

இந்த விடயத்தை மறுபக்கமாகவும் பார்க்கலாம். 'நல்லாட்சி' உருவான பின்னர், அந்த அரசாங்கம் பின்பற்றும் மக்கள் விரோதக் கொள்கைகள் காரணமாகவே இத்தகைய போராட்டங்கள் சகல தரப்பு மக்களாலும் நடாத்தப்பட்டு வருகின்றன எனவும் கூறலாம்.

காணாமல் போனோர் விவகாரம், நில மீட்புப் போராட்டம், தமிழ் கைதிகள் விவகாரம் போன்ற தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, அனைத்து இலங்கை மக்களையும் பாதிக்கும் விலைவாசியுயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம், அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகள், அரசாங்க ஊழியர்கள் – மாணவர்கள் கோரிக்கைகள் நிறைவேறாமை, விவசாயிகளின் விளை பொருட்களுக்கு உத்தரவாத விலையின்மை போன்ற பல பிரச்சினைகளுக்காகவும் இன்று மக்கள் வீதியில் இறங்கிப் போராட ஆரம்பித்துள்ளனர் என்பதே உண்மை.

தலைநகர் கொழும்பில் மக்கள் அரசாங்கத்துக்கு தமது எதிர்ப்பை வெளிக்காட்டும இடங்களாக இரண்டு இடங்கள் திகழ்கின்றன. ஒன்று கோட்டை புகையிரத முன்றல் மற்றது லிப்டன் சுற்று வட்டாரம்.

பொலிசார் தெரிவிக்கும் தகவலின்படி, கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் கொழும்பில் 49 ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் நடாத்தப்பட்டுள்ளன. இந்த ஆர்ப்பாட்டங்களில் பெரும்பாலானவை பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்பட்டவை எனவும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.


ஆர்ப்பாட்டம் செய்யும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றத் தவறுவதால், அவை நாளாந்தம் அதிகரித்து பொதுமக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு இடையூறு விளைவிப்பதையும் காண முடிகிறது. ஆனால் அரசாங்கமோ போராடும் மக்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்குப் பதிலாக கொழும்பில் ஆர்ப்பாட்டங்களுக்குத் தடை விதிப்பது பற்றி ஆலோசித்து வருகிறது. இது 'சீப்பை ஒழித்து வைப்பதன் மூலம் கலியாணத்தை நிறுத்தலாம்' என்ற கதையாகவே உள்ளது.

# தோட்ட சேவையாளர்களும் போராட்டத்தில்!

இலங்கையின் மலையகப் பகுதிகளில் உள்ள பெருந்தோட்டங்களில் பணியாற்றும் தோட்டச் சேவையாளர்களும் தமது கோரிக்கைகளுக்காகப் போராட்டத்தில் குதிக்க முடிவு செய்துள்ளனர்.

தோட்ட முதலாளிமார் சம்மேளனத்துடன் செய்து கொண்ட அவர்களது சம்பள உடன்படிக்கை 2016 செப்ரெம்பர் மாதத்துடன் நிறைவடைந்துள்ளது. அதன் பின்னர் இன்றுவரை புதிய உடன்படிக்கை கைச்சாத்தாகவில்லை. மூன்று தடவைகள் பேச்சுவார்த்தை நடைபெற்றும் தோட்ட சேவையாளர்கள் கோரும் 40 சதவீத சம்பளவுயர்வை வழங்க முதலாளிமார் சம்மேளனம் மறுத்து வருகிறது. முதலாளிமார் சம்மேளனம் 20 சதவீத சம்பளவுயர்வை மட்டுமே வழங்க முடியும் எனத் தெரிவித்துள்ளது. இன்றைய வாழ்க்கைச் செலவு உயர்வில் 40 வீத சம்பளவுயர்வே தேவை என தோட்ட சேவையாளர் சங்கம் வாதிடுகிறது.

இந்த நிலைமையில் தோட்ட முதலாளிமார் சம்மெளனத்தின் அசமந்தப் போக்கைக் கண்டித்தும், தமது கோரிக்கைகளை வலியுறுத்தியும் அட்டன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்னால் தோட்ட சேவையாளர்கள் மார்ச் 11ஆம் திகதி ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடாத்தினர்.




இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் 1,000இற்கும் மேற்பட்ட தோட்டச் சேவையாளர்கள் கலந்து கொண்டனர்.

தமது கோரிக்கையை முதலாளிமார் சம்மேளனம் தீர்த்து வைக்காவிட்டால், மார்ச் 28ஆம் திகதி முதல் பொது வேலைநிறுத்தத்தில ஈடுபடப் போவதாக தோட்ட சேவையாளர சங்கத்தின் தலைவர் தம்மிக்க ஜயவர்த்தன தெரிவித்திருக்கிறார்.

தோட்டத் தொழிலாளர்களும் தமது சம்பளவுயர்வுக்காக கடந்த ஆண்டு தன்னெழுச்சியான போராட்டங்களை ஆரம்பித்து நடாத்தியதால்தான் ஓரளவான சம்பளவுயர்வைத் தன்னும் பெற முடிந்தது.

''மயிலே மயிலே இறகு போடு'' என்றால் அது ஒருபோதும் சமாதானமாக இறகு போடப் போவதில்லை. அது போல முதலாளிமார்களும் ஒருபோதும் நியாயத்தை உணர்ந்து தாமாகவே தோட்டச் சேவையாளர்களின் சம்பளவுயர்வை வழங்கப் போவதில்லை. போராட்டம் ஒன்று மட்டுமே தீர்வைப் பெற்றுத்தரும்.

# ‘வானவில்’ எதைச் சாதித்தது?




**‘வா**னவில்’ எதைச் சாதித்தது? இப்படியொரு கேள்வி இடையிடையே எம்மை நோக்கி எழுப்பப்படுகிறது. இந்தக் கேள்வியை எழுப்புபவர்கள் ஒரே ரகத்தினர் அல்ல. எமக்கு நேர் எதிர்க் கருத்துள்ளவர்களும் எழுப்புகிறார்கள். கருத்து வித்தியாசம் உள்ளவர்களும் எழுப்புகிறார்கள். எம்மை ஆதரிக்கும் சிலரும் எழுப்புகிறார்கள்.

பொதுவாக புலம்பெயர் நாடுகளில் வெளிவரும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளை நோக்கி இத்தகையதோர் கேள்வி எழுப்பப்படுவது அபூர்வமாகவே இருக்கும். ஏனெனில் தனி நபர்களாக அந்தப் பத்திரிகைகளை நடாத்தும் பெரும்பாலானோரின் ஒரே குறிக்கோள் பணம் சம்பாதிப்பதே. தமது பத்திரிகையை விற்று அவர்கள் பணம் சம்பாதிக்க முடியாது. ஏனெனில் தாயகத்தில் வெளிவரும் பத்திரிகைகள் போல் புலம்பெயர் நாடுகளில் பத்திரிகைகளை விலைக்கு விற்பதில்லை. எல்லாமே இலவச விநியோகம்தான்.

எனவே பணம் சம்பாதிப்பதற்கு ஒரேவழி வர்த்தகர்களிடம் விளம்பரங்களைப் பெற்றுப் பிரசுரிப்பதுதான். வர்த்தகர்களில் பெரும்பாலானோர் தமிழ் தேசியத்துக்கும், அதைக் ‘கட்டிக் காத்த’ புலிகளுக்கும் விரும்பியோ விரும்பாமலோ ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளவர்கள். எனவே பத்திரிகை நடாத்துபவர்களும் கண்ணை மூடிக்கொண்டு தமிழ் தேசியத்தையும், புலிகளையும் ஆதரித்து எழுதினால்தான் விளம்பரங்களைப் பெற்று நாலு பணம் சம்பாதிக்க முடியும். ஊடக சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் நான்காவது கால் என்பார்கள். ஆனால் துரதிஸ்டவசமாக தமிழ் சூழலில் அது அறவே இல்லை என்பதுதான் நமது உண்மையான நிலை.

இந்தப் பத்திரிகைகளுடன் ஒப்பிடும் போது ‘வானவில்’ மிகவும் ‘சிறிசு’. அதன் வடிவம் சிறிது. பக்கங்கள் குறைவு. வண்ண வண்ண ஜிகினா வேலைப்பாடுகள் எதுவுமில்லை. விளம்பரம் இல்லை. இப்படிப் பல இல்லைகளைக் கூறலாம். ஆனால் வானவில்லின் நோக்கும் போக்கும் வித்தியாசமானது. அதன் காரணமாகவே எமது பத்திரிகை நண்பர்களினதும் எதிரிகளினதும் கவனிப்பைப் பெறுகின்றது.

‘வானவில்’ ஆரம்பிக்கப்பட்டு 6 வருடங்கள் உருண்டோடிவிட்டன. இப்பொழுது ஏழாவது ஆண்டில் காலடி வைத்துள்ளது. அதாவது ‘அரிவரி’ வகுப்பினை இப்பொழுதுதான் தாண்டியுள்ளது. இருப்பினும் கடந்த 6 வருட காலத்தில் ‘வானவில்’ பல ஆயிரம் மின்னஞ்சல் வாசகர்களைப் பெற்றுள்ளது. சில நூறு அச்சுப் பிரதி வாசகர்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்தச் சாதனையைப் பார்க்கும் போது எமக்கே வியப்பு ஏற்படுவதுண்டு. ஏனெனில் ‘வானவில்’ தொடர்ந்து வெளி வருமா என சந்தேகப்பட்டவர்களில் நாமும் உள்ளடங்கி இருந்தோம் என்பதுதான் உண்மை. ஆனால் எல்லாத் தடைகளையும் தாண்டி இதுவரை அது நின்று பிடித்துள்ளது. இனிமேலும் அது தொடரும் என்ற அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு.

ஆறு வருடங்களுக்கு முன்னர் நாம் வானவில்லை ஆரம்பித்த போது எமக்கு இரண்டு குறிக்கோள்கள்தான் பிரதானமாக இருந்தன. முதலாவது நோக்கம், ஒற்றைப் பரிமாணமான தமிழ்த் தேசியம் என்ற அபினி மயக்கத்திலிருந்து தமிழ் மக்களை விடுவித்து, அவர்களுக்கு வாழ்வின் மீது பன்முகப் பார்வை கொண்ட உண்மையான ஜனநாயக உணர்வை ஊட்டுவது. இந்த நோக்கத்தில் பெரிய அளவில் இல்லாவிட்டாலும், ‘விரலுக்குத் தக்க வீக்கம்’ என்பது போல ஓரளவு திருப்பிகரமான நிலையை உருவாக்கியுள்ளோம். இந்த உண்மையை தாயகத்திலிருந்தும், உலகம் முழுவதுமிருந்தும் தினசரி எமக்கு வரும் மின்னஞ்சல்கள் எடுத்து இயம்புகின்றன.

எமது இரண்டாவது நோக்கம், ‘விடுதலைக்கான ஆயுதப் போராட்டம்’ என்ற போர்வையில் தமிழ் தேசிய பாசிசத்தால் ஏறத்தாழ 30 ஆண்டுகளாக சிதறடிக்கப்பட்டிருந்த முற்போக்கு சக்திகளை இந்தப் பத்திரிகையின் ஊடாக மீண்டும் ஒரு தொடர்பில் கொண்டு வரும் முயற்சியாகும். அந்த முயற்சியைப் பொறுத்தவரை, இன்னமும் அந்த சக்திகளை ஒரு முழுமையான அமைப்பு வடிவத்தில் இணைக்க முடியவில்லையாயினும், உலகம் முழுவதும் பரந்து வாழும் அந்த சக்திகளை தொடர்பு கொள்வதில் ‘வானவில்’ ஒரு கணிசமான அளவு வெற்றியை ஈட்டியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் சொல்லலாம். உலகம் முழுவதும் சமூக மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சிகளில் பத்திரிகைகள் ஒரு வலிய ஆயுதமாகப் பயன்பட்டிருக்கின்றன என்ற உண்மையை நாம் என்றும் நினைவில் கொண்டுள்ளோம்.

தற்போதைய நிலையில் இந்த இரண்டு சாதனைகளுமே ‘வானவில்’ நோக்கி கேள்வி எழுப்புபவர்களுக்கான நடைமுறைரீதியிலான எமது பதில்களாகும். ‘வானவில்’ போன்ற ஒரு சிறிய பத்திரிகை கடல் போன்ற மிகப்பெரிய சன சமுத்திரத்தில் இதைவிட பெரிதாக நீச்சலடிக்க முடியாது என்பதே யதார்த்த நிலையாகும்.

இந்தச் சாதனைகளைக் கூட நிலைநாட்டியதில் சில காரணிகள் பக்கபலமாக இருந்திருக்கின்றன.

முதலாவது காரணி, வானவில்லை வெளியிடுவது ஒரு தனிநபரல்ல.

ஒரு குழுவே வெளியிடுகின்றது. அது ஒரு சிறிய குழுவாக இருப்பினும், சரியானதும் தெளிவானதுமான அரசியல் நோக்கைக் கொண்டிருப்பதும், அதை உருக்குப் போன்ற ஒற்றுமையுடன் செயல்படுத்துவதுமாகும்.

இரண்டாவது காரணி, வெளியீட்டுக் குழுவினர் ஒவ்வொருவரும் மிகுந்த அர்ப்பண உணர்வுடன் மாதந்தோறும் 'வானவில்' அச்சிடுவதற்கான செலவு, அதைத் தபாலில் அனுப்புவதற்கான செலவு, என தத்தமது நிதிப் பங்களிப்பை மனமுவந்து வழங்குவதாகும்.

மூன்றாவது காரணி, வானவில்லை உருவாக்குவதில் சில தோழர்கள் சேவை மனப்பான்மையுடன் மனமுவந்து வழங்குகின்ற தொழில்நுட்ப (தட்டச்சு, பக்க வடிவமைப்பு, ஒப்புநோக்கு, அச்சக வேலை) உதவிகளாகும்.

நான்காவது காரணி, வானவில்லின் அச்சுப் பிரதிகளை கனடாவிலும், இலங்கையிலும் சிரமத்தைப் பாராது விநியோகம் செய்யும் தோழர்களினதும், நண்பர்களினதும் தன்னலம் கருதாத பங்களிப்பாகும்.

இவர்கள் அனைவரினதும் பங்களிப்பு இல்லாமல் 'வானவில்' இவ்வளவு காலமும் நிலைத்திருந்திருக்க முடியாது.

எமது பத்திரிகை ஆறாவது ஆண்டைப் பூர்த்தி செய்துள்ள இந்தச் சூழ்நிலையில், மேலும் எமது வளர்ச்சிக்கு வழமைபோல வாசகர்களின் சாதகமானதும் பாதகமானதுமான விமர்சனங்களை எப்பொழுதும் வரவேற்கக் காத்திருக்கின்றோம். எனவே தோழர்களே, நண்பர்களே, தயங்காது உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

"நூறு பூக்கள் மலரட்டும், நூறு சிந்தனைப் போக்குகள் முட்டி மோதட்டும், அதில் நாறும் கீழ்மைகள் தகரட்டும்" என்பதே எமது தாரக மந்திரமாகும்.

**-தோழர் மணியம்**

# ஏ.ஜி.எத்திராஜுலு: ராகுல சாங்கிருத்தியாயனுக்குத் தமிழ்க் குரல் தந்தவர்!

எஸ்.ஏ. பெருமாள்

**தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய பன்மொழிகளில் புலமை பெற்றிருந்தவரும், மார்க்சியச் சிந்தனையாளரும், சிறந்த மொழிபெயர்ப்பாளருமான தோழர் ஏ.ஜி. எத்திராஜுலு 23.02.2017 அன்று காலமானார். அவருக்கு வயது 83.**

**கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக கம்யூனிஸ்ட் கட்சியோடும் நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத்தோடும் இணைந்து எழுத்துப் பணியாற்றியவர் எத்திராஜ லு. ராகுல சாங்கிருத்தியாயனின் நூல்களில் ஒன்றைத் தவிர அனைத்தையும் இந்தியிலிருந்து தமிழாக்கம் செய்தார். 'சிந்து முதல் கங்கை வரை', 'ராஜஸ்தானத்து அந்தப்புரங்கள்', 'மனித சமுதாயம்', 'பொதுவுடமைதான் என்ன?', 'இந்து தத்துவ இயல்', 'இஸ்லாமிய தத்துவ இயல்', 'கிரேக்க தத்துவ இயல்', 'ஐரோப்பிய தத்துவ இயல்', 'ராகுல்ஜியின் வாழ்க்கை வரலாறு', 'ஊர் சுற்றிப் புராணம்', 'பௌத்த தத்துவ இயல்' போன்ற பல அற்புதமான நூல் களை தமிழுக்குத் தந்தவர். அந்த நூல்கள் கடந்த 50 ஆண்டுகளாக நிலைத்து நிற்கின்றன.**

**நன்றி: த இந்து**

முன்பக்கத் தொடர்ச்சி…

இருந்து வருகிறார்கள். அப்படி இருக்க ஏன் தமது அரசியல் தலைமையை மீறித் தன்னெழுச்சியாகப் போராட்டத்தில் மக்கள் குதித்துள்ளார்கள் என்பதே கேள்வியாகும்.

குறிப்பாக தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களே பெரும்பாலும் தன்னெழுச்சியான போராட்டங்களில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது. அவர்களது இந்தத் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு இரண்டு விதமான காரணங்களைக் கூற முடியும்.

முதலாவது காரணம், சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை மாறி மாறி தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் அனைவரும் முதலில் அகிம்சைப் போராட்டம் என்றும், பின்னர் ஆயுதப் போராட்டம் என்றும் பல போராட்டங்களை முன்னெடுத்த போதிலும் அவற்றால் தமிழ் மக்களின் ஒரு சிறு பிரச்சினையைக் கூடத் தீர்த்து வைக்க முடியவில்லை. மாறாக மக்களுக்கு அழிவுகள்தான் மிஞ்சின. எனவே இன்றைய தமிழ் தலைமைகளில் நம்பிக்கை இழந்த தமிழ் மக்கள் பிரச்சினையைத் தமது கைகளில் எடுத்து தமது சொந்தக்காலில் நின்று போராடும் ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இரண்டாவது காரணம், மிக நீண்டகாலமாக அரசாங்க இராணுவ ஒடுக்குமுறைக்கும், புலிகளின் பாசிச ஒடுக்குமுறைக்கும் உள்ளான தமிழ் மக்கள், இவற்றில் மிக மோசமான ஒடுக்குமுறையான புலிப் பாசிச ஒடுக்குமுறையிலிருந்து 2009 மே மாதத்துடன் விடுதலை அடைந்துவிட்டனர். ஆனால் அரச ஒடுக்குமுறை தொடர்கிறது. ஆனால் யுத்தம் முடிவடைந்த பின்னர் அந்த ஒடுக்குமுறையில் இன்றைய சர்வதேசச் சூழ்நிலை காரணமாக ஒரு தளர்வு ஏற்பட்டுள்ளது.

இதை ஒரு சிறிய ஜனநாயக இடைவெளி என்றும் சொல்லலாம். நினைத்திருந்தால் இந்த இடைவெளியை தமிழ் தலைமை (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) நன்கு பயன்படுத்தி தமிழ் மக்களின் உரிமைகளில் சிலவற்றையேனும் வென்றெடுத்திருக்கலாம். ஆனால் முன்னைய அரசை தமிழ் மக்களுக்கு எதிரான கொடுங்கோல் அரசு என

வர்ணித்த இந்தத் தமிழ் தலைமை, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை சுயாதீனமாக முன்னெடுத்துச் செல்வதற்குப் பதிலாக, இன்றைய மக்கள் விரோத, தமிழின விரோத, ஏகாதிபத்திய சார்பு அரசுடன் கைகோர்த்துச் செயல்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் தலைமை செய்யத் தவறியதை, சற்றுத் துணிச்சலுடன் மக்கள் செய்ய முன் வந்திருக்கின்றனர். அதாவது கிடைத்திருக்கின்ற சிறிய ஜனநாயக இடைவெளியைப் பயன்படுத்த முயல்கின்றனர். ஆனால் இந்த இடைவெளியை எவ்வளவு காலத்துக்கு அரசு அனுமதிக்கும் என்பதில்தான் இதன் எதிர்காலம் அடங்கியிருக்கின்றது.

அதே நேரத்தில் இந்தத் தன்னெழுச்சியான போராட்டங்களில் சில அபாயங்களும் இருக்கின்றன. ஏனெனில் இந்தப் போராட்டங்களுக்கு சரியான ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தலைமையோ, திட்டவட்டமான கொள்கைகளோ கிடையாது. இப்படியான போராட்டங்களில் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு தலைமைகளும் கொள்கைகளும் அமைவது வழமை. அப்படியான ஒரு நிலைமை மக்களின் போராட்டங்களைத் திசைதிருப்பிடவும், தடம் புரளச் செய்யவும் கூடும். உதாரணமாக மத்திய கிழக்கில் சில வருடங்களுக்கு முன்னர் தன்னெழுச்சியாக ஆரம்பமான 'அரபு வசந்தம்' (Arab Spring) என அழைக்கப்பட்ட போராட்டங்கள் இறுதியில் ஏகாதிபத்தியத்தால் பயன்படுத்தப்பட்டதை நாம் கண்டோம். (எகிப்தில் இந்தப் போராட்டத்தால் முதலில் தீவிரவாத இஸ்லாமிய அரசு ஏற்பட்டதும், பின்னர் அந்த ஆட்சியைக் கவிழ்த்து இன்று இராணுவ ஆட்சி ஏற்பட்டிருப்பதும் ஒரு உதாரணம்)

தமிழ் மக்கள் மத்தியில் நடைபெறும் போராட்டங்களிலும் இத்தகைய சில போக்குகளை அவதானிக்க முடிகிறது. அவர்களது தன்னெழுச்சியான போராட்டங்களில் ஊடுருவவும், அதைத் திசை திருப்பவும், இறுதியாக தமது வெளிநாட்டு எஜமானர்களின் தேவைக்கு அதைப் பயன்படுத்தவும் சில சக்திகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது.

ஏனெனில் இலங்கையில் உள்நாட்டுப் போர் நடைபெற்று தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த நேரத்தில் நாட்டை எட்டியும் பார்க்காது அமெரிக்கா போன்ற மேற்கத்தைய நாடுகளில் சுகபோகமாக வாழ்ந்த சிலர், போர் முடிவுற்ற பின்னர் நிரந்தரமாக நாடு திரும்பி – குறிப்பாக வட பகுதிக்கு – சமூக ஆய்வுகள், மக்களை விழிப்பூட்டல், போன்ற இன்னோரன்ன 'சேவைகளில்' ஈடுபட்டிருக்கின்றனர்.

இவர்கள் கடந்த காலத்தில் செய்த 'சேவைகளை' எடுத்துப் பார்த்தால் இவர்களது சுயரூபங்கள் அம்பலத்துக்கு வரும். பாசிசப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான போர் நடைபெற்ற காலத்தில் இந்தப் பேர்வழிகள் சர்வதேச அரங்கில் ஒருதலைப்பட்சமாக இலங்கை அரசின் மனித உரிமை மீறல்களை மட்டுமே உரத்துப் பிரச்சாரம் செய்தனர். மேற்கத்தைய நாடுகள் பல இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டை எடுத்ததிற்கு இத்தகையவர்களது பிரச்சாரமும் ஒரு காரணம்.

போர் முடிவுற்ற பின்னர் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி இத்தகையவர்களில் சிலர் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் இலங்கைக்குள் கால் பதித்தனர். இத்தகையவர்கள் அடுத்ததாக மேற்கொண்ட 'சேவை' 2015 ஜனவரி 08 இல் அப்போதிருந்த ஏகாதிபத்திய விரோத அரசை வீழ்த்தி, மேற்கத்தைய சார்பு வலதுசாரி அரசொன்றைப் பதவிக்குக் கொண்டுவர வேலை செய்ததாகும். அந்த நோக்கத்தில் வெற்றிபெற்ற பின்னர், தமிழ் தலைமையை இன்றைய அரசுடன் ஒட்ட வைத்து, தற்போதைய வலதுசாரி அரசைப் பாதுகாப்பதில் முனைந்திருக்கின்றனர்.

இத்தகையவர்கள்தான் மக்களின் தன்னெழுச்சியான போராட்டங்களை பின்னாலிருந்து இயக்குபவர்களாக, ஊக்குவிப்பவர்களாக இருக்கின்றனர். பின்னர் இன்று மக்கள் செல்வாக்கை இழந்து வரும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் – சுமந்திரன் தலைமையூடாக அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, அப்போராட்டங்களை 'வெற்றி' பெற அல்லது நீர்த்துப்போக வைப்பவர்களாகவும் இவர்களே இருக்கின்றனர். இதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வலதுசாரித் தலைமையையும், இன்றைய மைத்திரி – ரணில் வலதுசாரி அரசையும் பாதுகாப்பதற்கான ஒரு மனோநிலையை மக்கள் மத்தியில் உருவாக்க முயல்கின்றனர்.

எனவே, இன்று மக்கள் மத்தியில் உருவாகியுள்ள தன்னெழுச்சியான போராட்டங்களைக் கூர்ந்து அவதானித்து, அவற்றுக்கான ஒரு சரியான தலைமையையும், வழிகாட்டுதலையும் வழங்க வேண்டிய பொறுப்பு முற்போக்கு சக்திகளுக்கு முன்னால் உள்ளது. ஏனெனில் முற்போக்கு சக்திகளினால் வழிநடாத்தப்படும் போராட்டங்கள் மட்டுமே சரியானதும் நிரந்தரமானதுமான வெற்றியைப் பெற்றுள்ளன என்பதற்கு உலகம் முழுவதிலும், இலங்கையிலும் ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன.

இந்த உண்மையை முற்போக்கு சக்திகள் கிரகித்து, பிற்போக்கு சக்திகளுக்கோ, ஏகாதிபத்திய அடிவருடிகளுக்கோ மக்கள் மத்தியில் ஒரு தளம் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பும், கடமையும் உள்ளது என்பதை ஒவ்வொருவரும் மனதில் இருத்திச் செயல்படுவது இன்றைய காலகட்டத்தில் அவசியமாகும்.

# வாகனத் தரிப்பிடத்துக்குள் இலங்கை ஜனநாயகம்!

இலங்கை நாடாளுமன்றத்தில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அடுத்த பெரிய அணியாக 51 உறுப்பினர்கள் கொண்ட கூட்டு எதிரணி திகழ்கிறது. இருந்தும் கூட்டு எதிரணி பல தடவை கோரியும் அதற்கு எதிர்க்கட்சி அந்தஸ்து இதுவரை வழங்கப்படவில்லை. மாறாக 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு எண்ணிக்கை அடிப்படையில் எதிர்கட்சி அந்தஸ்தைப் பெறத் தகுதியற்றிருப்பது ஒருபுறமிருக்க, அது உண்மையான ஒரு எதிர்க்கட்சியாகச் செயல்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனும், அவரது சகாவான சுமந்திரனும், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் எதிர்ப்பையும் மீறி அரசாங்கத்தின் தொங்கு தசைகளாகச் செயல்பட்டு வருகின்றனர்.

தற்போதைய மைத்திரி – ரணில் அரசாங்கம் உண்மையான எதிரணியினரின் ஜனநாயக உரிமைகளைப் புறம் தள்ளுவது ஒருபுறமிருக்க கட்சிகளின் தனித்தனமையையும் அழித்தொழிக்கப் பார்க்கின்றது. நாடாளுமன்றத்தில் 5 உறுப்பினர்களைக் கொண்ட விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி தம்மை நாடாளுமன்றத்தில் ஒரு தனிக் கட்சியாக அங்கீகரிக்கும்படி விடுத்த வேண்டுகோளை சபாநாயகர் கரு ஜெயசூரிய நிராகரித்திருக்கிறார்.

ஒரு கட்சியின் ஜனநாயக ரீதியிலான வேண்டுகோளை நிராகரித்த ஜனநாயக விரோதச் செயலைத் தட்டிக்கேட்ட இன்னொரு எதிர்க்கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தன ஒரு வாரத்துக்கு நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்கேற்க முடியாதவாறு தடை விதிக்கப்பட்டிருக்கிறார். இந்த ஜனநாயக விரோதச் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற மறுத்த தினேஸ் பொலிசார் வரவழைக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்.

இந்த ஜனநாயக விரோதச் செயல்களுக்கு கண்டனம் தெரிவித்து ஊடகவியலாளர்களுக்கு விளக்குவதற்காக கூட்டு எதிரணியினர் நாடாளுமன்றக் கட்டிடத்துக்குள் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டுக்கும் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக கூட்டு எதிரணியினர் வேறு வழியில்லாமல் தமது ஊடகவியலாளர் மாநாட்டை நாடாளுமன்ற கட்டிடத்துக்கு வெளியே வாகனத் தரிப்பிடத்தில் நடாத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய ‘நல்லாட்சி’யின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்கள் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கும் கிடைக்கும் ‘அந்தஸ்தை’ப் பார்த்தால், சாதாரண பொதுமக்களின் கதி எப்படியிருக்கும் என்பது புரியும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இந்தக் கதி என்றால், காணாமல் போன தமது உறவுகளைத் தேடும் மக்களுக்கும், தமது நிலத்தை மீட்கப் போராடும் மக்களுக்கும், விசாரணையின்றி வருடக்கணக்காக சிறைகளில் வாடும் தமிழ் கைதிகளுக்கும், தமக்கு வேலை கோரிப் போராடும் பட்டதாரிகளுக்கும், தமது பல்வேறு கோரிக்கைகளுக்காகப் போராடும் இதர பல்துறை மக்களுக்கும் என்ன நடக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும் போது, நாம் ஒரு ஜனநாயக நாட்டில்தான் வாழுகிறோமா என்ற சந்தேகம்தான் ஏற்படுகிறது.

இலங்கையைப் பொறுத்தவரை மாமனார் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தான் சர்வாதிகார ஆட்சியாளர் என்று பெயர் எடுத்தவர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இன்று நாட்டில் நடப்பவற்றைப் பார்த்தால் மருமகன் ரணில் மாமனாரைத் தூக்கி அடித்துவிடுவார் போலத் தெரிகிறது.

**–பி.வி. (கொழும்பிலிருந்து)**

# ‘நல்லாட்சி’யின் இன்னுமோர் உதாரணம்!

*2015 ஜனவரி 08 ஆட்சி மாற்றத்தின் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டவரும், விவசாய அமைச்சருமான துமிந்த திசாநாயக்க தனது அமைச்சுக்கு என இராஜகிரியாவில் அதிக வாடகையுடன் பெற்றுக்கொண்ட தனியார் கட்டிடம் ஒன்று சம்பந்தமாக கடந்த காலத்தில் பல தடவைகள் பிரச்சினைகள் கிளப்பப்பட்டிருந்தன.*

இந்தக் கட்டிடத்துக்கு பெறுமானத்துக்கு அதிகமான வாடகை வழங்கப்படுகிறது என்றும், இந்தக் கட்டிடத்தைப் பெறுவதில் ஊழல்கள் இடம் பெற்றிருப்பதாகவும், அமைச்சர் தனக்கு வேண்டிய ஒருவருக்கு சலுகை செய்வதற்காகவே இப்படி நடந்து கொள்வதாகவும், இது அரசாங்கம் பெரிதாகப் பேசும் ‘நல்லாட்சி’ தத்துவத்துக்கு எதிரானது எனவும், எதிரணியினர் தொடர்ச்சியாகக் குற்றம்சாட்டி வந்தனர்.

இந்த நிலையில், அமைச்சர் துமிந்த திசாநாயக்கவே அண்மையில் கொழும்பிலிருந்து வெளியாகும் ‘டெயிலி மிரர்’ பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் சில தகவல்களை வெளியிட்டிருக்கிறார். அவர் வெளியிட்ட தகவல்களின்படி, விவசாய அமைச்சால் இன்னமும் பயன்படுத்தப்படாத அந்தக் கட்டிடத்துக்கு 2016 ஏப்ரல் மாதம் முதல், அதாவது கடந்த ஒரு வருடமாக மாதாந்தம் வாடகையாக 21 மில்லியன் ரூபாய்கள் (2 கோடி 10 இலட்சம்) வழங்கப்பட்டு வருவதாகக் கூறியிருக்கிறார். ‘நல்லாட்சி’ பேசி ஆட்சிக்கு வந்தவர்கள் மக்களின் வரிப்பணத்தை எப்படியெல்லாம் துஸ்பிரயோகம் செய்கிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம். இதை ‘ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்’ என்றும் சொல்லலாம்.